பரிசுத்த ஆவியானவர் யார்?

தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது.[1]

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், தேவன் என் மீது ஊற்றின பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும், மறு ஜென்ம முழுக்கினாலும், என்னை இரட்சித்தார்.[2]

நீர் சத்தியத்தின் ஆவியாய் இருக்கிறீர்.[3]
நீர் ஆலோசகர்.[4]

நீர் கர்த்தருடைய ஆவியானவர். நீர் ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாக இருக்கிறீர்.[5]

நீர் கிருபையின் ஆவியாகவும் விண்ணப்பங்களின் ஆவியாகவும்,[6]
என் சுதந்திரத்தின் அச்சாரமாயும் இருக்கிறீர்.7

ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட சிந்தை ஜீவனும் சமாதானமுமாம்.[8] நீர் எனக்கு இளைப்பாறுதல் தருகிறீர்.[9]

நீர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும் கூட ஆராய்கிறீர்.[10]
நீர் எப்போதும் இயேசுவை மகிமைப் படுத்துகிறீர். [11]

ஆமென்

[1] யோபு 33:4
[2] தீத்து 3:5,6
[3] யோவான் 16:13
[4] யோவான் 14:16,17
[5] ஏசாயா 11:2
[6] சகரியா 12:10
[7] எபேசியர் 1:14
[8] ரோமர் 8:6
[9] ஏசாயா 63:14
[10] 1 கொரிந்தியர் 2:10
[11] யோவான் 16:14

யோபு 33:4
தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர்கொடுத்தது.

தீத்து 3:5,6
நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக,

யோவான் 16:13
சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

தீத்து 14:16–17
நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

ஏசாயா 11:2
ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

சகரியா 12:10
நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.

எபேசியர் 1:13,14
நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.

ரோமர் 8:6
மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

ஏசாயா 63:14
கர்த்தருடைய ஆவியானவர் அவர்களைப் பள்ளத்தாக்கிலே போய் இறங்குகிற மிருகஜீவன்களைப்போல இளைப்பாறப்பண்ணினார்....

1 கொரிந்தியர் 2:10
நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.

யோவான் 16:13–15
சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.

© Copyright Derek Prince Ministries-Asia/Pacific

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au